**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE FAST TRACK COURT, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | STC.124/2023 |
| Deposition of witness | | PW1 |
| Name | | திரு. நடேசன் |
| Father's/Husband Name | | திரு. பிச்சைக்கண்ணு |
| Village | | பட்டுக்கோட்டை |
| Taluk | | பட்டுக்கோட்டை |
| Caste | | - |
| Calling | | - |
| Religion | | - |
| Age | | 54/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 07th day March 2024

**(சாட்சியிடம் சத்தியப்பிரமானம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி எனக்கு உறவினர் இல்லை, பழக்கம். இதை தவிர வேறு வழக்கு எதுவும் எதிரி மீது தாக்கல் செய்யவில்லை. எதிரியின் கணவர் எனக்கு குடும்ப உறவினர் என்பதால் எதிரியும் எனக்கு பழக்கம். எதிரியும், அவரது கணவரும் தான் என் வீட்டிற்கு வந்து ரூ.10,00,000/- கடன் கேட்டார்கள். இந்த விபரத்தை புகார் மனுவிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் சொல்லவில்லை. எந்த தேதியில் கடன் கேட்டார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. எந்த தேதியில் கடன் கேட்டார்கள் என்று வழக்கறிஞர் அறிவிப்பிலும் புகார் மனுவிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பிலும் புகார் மனுவிலும் மூன்று மாதத்தில் கடனை திருப்பி தருவதாக எதிரி சொன்னார் என்று சொல்லியுள்ளேன் . 15.03.2023 அன்று எதிரி என்னிடம் ரூ.10,00,000/- கடன் வாங்கி சென்றார். எனக்கு எதிரி 15.03.2023 அன்று

பணம் வாங்க எதிரி வருவதாக முன் கூட்டியே எனக்கு தெரியும். நான் கையிருப்பில் ரொக்கமாக வைத்திருந்த பணத்தை தான் கடனாக கொடுத்தேன். காசோலை தவிர வேறு ஆவணங்கள் உத்தரவாதத்திற்காக எழுதி வாங்கவில்லை. கடன் கொடுத்த அன்றே நான் எதிரியிடம் காசோலையை வாங்கவில்லை. நான் என்னுடைய செல்போன் மூலமாக எதிரியிடம் பல முறை கடனை திருப்பி கேட்டேன். இதனை வழக்கறிஞர் அறிவிப்பிலும் புகார் மனுவிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியின் கணவருக்கு நான் ஏற்கெனவே பல முறை கடன் கொடுத்து வாங்கியுள்ளேன். எதிரியின் கணவரிடம் நான் காசோலைகளை வாங்கியதில்லை. 20.06.2023 அன்று எதிரி காசோலையை என்னுடைய வீட்டிற்கு வந்து கொடுத்தார். எதிரி என் வீட்டிற்கு வந்து காசோலை எதுவும் கொடுக்கவில்லை என்றாலும், நான் முதன் முதலில் எதிரியை பார்க்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரி எந்த கடனும் பெறவில்லை என்றாலும், அதற்காக எந்த காசோலையும் என்னிடம் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. எதிரியின் கணவர் ரூ.2,00,000/- கடன் பெற்றார் என்றாலும், அதற்காக எதிரியின் காசோலையை அவரது கணவர் என்னிடம் எதிரிக்கு தெரியாமல் எதிரியின் கையெழுத்தை எதிரியின் கணவரே காசோலையில் நிரப்பி கொடுத்துவிட்டார் என்றாலும் அதனை வைத்து பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. வழக்கு காசோலையை தடயவியல் துறைக்கு பரிசோதனைக்கு அனுப்பவதற்கு எனக்கு எந்த வித ஆட்சேபணையும் இல்லை.

Signature of witness

*Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.*

Judicial Magistrate,
Fast Track Court (Magisterial Level)
Pattukkottai.